சுருக்கம்

சட்டத்துறை - தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் 240 கிலோ வாட் (KW) திறன் கொண்ட சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவிடும் பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்குதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

சட்ட (சுக)த் துறை

அரசாணை (நிலை) எண். 31

நாள் : 27.01.2022
பிலவ - தை - 14
திருவள்ளுவர் ஆண்டு - 2053.

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 07.09.2021.
2. பதிவாளர் (பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், அவர்களின் கடித எண்.1756/ பதிவாளர்/ தி.கொ(ம)க-பி2/பி3/2021, நாள் 20.09.2021 மற்றும் 22.11.2021.

........

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 07.09.2021 அன்று நடைபெற்ற கூட்டத்தொடரில், சட்டத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளிக்கும்போது, மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

"தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் 240 கிலோ வாட் (KW) திறன் கொண்ட சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவப்படும்."

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், பதிவாளர் (பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அவர்கள் மற்றவற்றுக்கிடையே, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவிடும் பணிகளுக்கென ரூ.1,75,06,000/- (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து ஆறாயிரம் மட்டும்) நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, பதிவாளர் (பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அவர்கள் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும்

தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை அவர்களிடமிருந்து பெற்று சமர்ப்பித்துள்ள முழுமையான திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவிடும் பணிகளுக்கென ரூ.1,66,91,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சத்து தொண்ணூற்றோராயிரம் மட்டும்) நிருவாக அனுமதி மட்டும் வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், பணி முன்னேற்றத்தின் அடிப்படையில், நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும் என்பதால், உரிய நேரத்தில் நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு கருத்துருவினை சமர்ப்பிக்குமாறு பதிவாளர், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாராக் குறிப்பு எண்.53419/ உள்-II/2021, நாள் 08.12.2021-இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. கார்த்திகேயன்,

அரசு செயலாளர் (சட்ட விவகாரங்கள்).

பெறுநர்:

1. பதிவாளர் (பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை- 600 028.
2. சட்டக்கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை- 600 010.
3. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை- 600 005.
4. சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 600 005.

நகல்:

1. மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
2. மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
3. மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
4. நிதி (உள்-II)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
5. பொதுப்பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
6. மாநில கணக்காயர், சென்னை – 600 018/600 035.
7. இருப்பிடத்தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

இ.கோ./உ.திரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

REGISTRAR
THE TAMIL NADU DR. AMBEDKAR
LAW UNIVERSITY, "POOMPOZHIL"
No.5, DR. D.G.S. DINAKARAN SALAI
CHENNAI - 600 028.

27/01/2022

Scanned with OKEN Scanner